## கருத்தரங்கக் குழுக்கள்

### புரவலர்கள்

அருள்முனைவர் ஞா.லெயோனார்டு சே.ச
அதிபர், தூய வளனார் கல்வி நிறுவனங்கள்

அருள்முனைவர் செ.பீட்டர் சே.ச,
செயலர், தூய வளனார் கல்லூரி

அருள்முனைவர் ம.ஆரோக்கியசாமி சேவியர் சே.ச
முதல்வர், தூய வளனார் கல்லூரி

### அமைப்பாளர்

முனைவர் ஞா.பெல்சி,
தமிழாய்வுத் துறைத்தலைவர்

### கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

முனைவர் டே.வில்சன்

### ஆலோசனைக் குழு

முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்
முனைவர் ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்
முனைவர் ஆ. இராஜாத்தி
முனைவர் சி. ஷகிலாபானு
முனைவர் ஆ. மரிய தனபால்

### ஒருங்கிணைப்புக் குழு

முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

திருமிகு. ஸ்ரீ.ரேவதி
திருமிகு.சீ.லலிதா
திருமிகு.பி.செபாஸ்டின் பெட்ரிக்
திருமிகு. பா.தேவஜாலிஸ்
திருமிகு.எஸ்.அருள்ராஜ்
திருமிகு. ஜா.ரோஸ்லின்மேரி
திருமிகு.லூ. அருண்பிரகாஷ்
திருமிகு. க.கலைப்பொன்னி
திருமிகு.தே.இன்பென்ட் ஜெபர்சன் ஜீசஸ்
திருமிகு. ப.எழில் செல்வன்
திருமிகு. ஞா.சேகர்
திருமிகு. அ.ஞா.உமா மகேஸ்வரி
திருமிகு. மு. பிரபாகரன்
திருமிகு. கி.ஜோஸ் ஆல்வின்
திருமிகு. க.கிருஷ்ணன்குட்டி
திருமிகு. மெ.சித்திரைச் செல்வி

நூல் அஞ்சல்

மாணவர் கருத்தரங்கம்
இந்திய விடுதலைப்போரில் தமிழகம்
(The role of Tamilnadu in Indian Freedom Struggle)

பெறுநர்

அனுப்புநர்
முனைவர் டே.வில்சன்
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்,
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002
தொலைபேசி : 0431 - 4226401,
அலைபேசி : 98424 10226

# மாணவர் கருத்தரங்கம்
## இந்திய விடுதலைப்போரில் தமிழகம்
(The role of Tamilnadu in Indian Freedom Struggle)

20, ஏப்ரல் 2022

**அறிவிப்பும் அழைப்பும்**



## தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
(A++ தரத்தகுதியும் செயல்திறன் ஆற்றல் வளத் தனித்தகுதியும்
சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றது)
திருச்சிராப்பள்ளி - 620 002.

## மாணவத்தோழர்களே,

வணக்கம். திருச்சிராப்பள்ளி மாநகரில் அமைந்துள்ள தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி (ST.JOSEPH'S COLLEGE) 1844இல் இயேசுசபை அருளாளர்களால் தொடங்கப்பெற்றுக் கடந்த 178 ஆண்டுகளாக ஏழை எளியமக்களின் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு கல்விப் பணி ஆற்றிவருகிறது. 2019ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியத் தர மதிப்பீட்டுக்குழுவின் (நான்காம் சுற்று) மதிப்பீட்டில் A++ தகுதியைப் பெற்ற இந்தியாவின் முதல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்னும் பெருமையைப் பெற்றுள்ளது. தமிழகத்தில் உள்ள கல்லூரிகளுள் பல்கலைக்கழக மானியக்குழுவின் சிறப்புத் தொன்மைத் தகுதியைப் பெற்றுள்ள ஒரே கல்லூரி இதுவேயாகும். இத்தகு பெருமைமிகு கல்லூரியில் நூல்களை வெளியிடுவதிலும் ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்துவதிலும் முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும் சிறப்புறச் செயல்படுகின்ற தமிழாய்வுத்துறை, மாணவர்களிடையே ஆய்வுப் போக்கினையும் பன்முகச் சிந்தனைகளையும் வளர்த்தெடுக்கும் நோக்கில் 2020-2021ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் கருத்தரங்கம் என்னும் முன்னோக்குச் செயல்பாட்டைத் தொடங்கியுள்ளது. இந்தச் செயல்பாட்டின் தொடர்ச்சியாக 'இந்திய விடுதலைப்போரில் தமிழகம்' என்னும் பொருண்மையில் மாணவர் கருத்தரங்கை 2022 ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் நடத்துவதற்குத் தமிழாய்வுத்துறை விழைகின்றது.

எம் துறைப் பேராசிரியர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இக்கருத்தரங்கை முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டு வரும் எம் தமிழாய்வுத்துறை ஆய்வாளர்கள் ஒருங்கிணைத்து நடத்துகின்றனர்.

## கருத்தரங்கின் நோக்கம்

விடுதலை பெற்ற பெருவிழாவின் 75ஆம் ஆண்டு நிறைவை நம் தாய்நாடாம் இந்தியா கொண்டாடிவரும் இவ்வேளையில் நாட்டின் விடுதலைக்காக உழைத்த விடுதலைப் போராட்ட வீரர்களையும், அவர்களின் தியாகத்தையும், அவர்கள் வழங்கிய உயர் சிந்தனைகளையும் நினைவுகூருவது இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும். வேலூர் சிப்பாய்க்கலகம் தொடங்கி இந்திய விடுதலைப் போரின் ஒவ்வொரு நிலைகளிலும் தாய்த்திருநாட்டின் விடுதலைப்பணியில் முன்னணியில் நின்று உழைத்த வீரர்களின் விளைநிலமாகத் தமிழகம் விளங்கிவந்துள்ளது. விடுதலைப்போரில் உயிர்க்கொடையால் மட்டுமன்றித் தங்கள் சிந்தனைகள், எழுத்துகள், கலைவடிவங்கள், செயல்திட்டங்கள், களப்போராட்டங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும் பங்காற்றியுள்ள தமிழர்களின் விடுதலையுணர்வையும் தமிழகத்தின் எழுச்சியையும் ஆராயும் நோக்கில் இக்கருத்தரங்கு நிகழ்த்தப்படுகிறது.

விடுதலை உணர்வை வலியுறுத்தியும் இந்திய விடுதலைப் போராட்ட நிகழ்வுகளை அடியொற்றியும் படைக்கப்பட்டுள்ள தமிழிலக்கியங்களின் பின்னணியில் தமிழகத்தின் பங்கை ஆராய்வதாக இக்கருத்தரங்கு அமைகிறது.

## ஆய்வுக்களங்கள்

புதுக்கவிதை, புதினம், சிறுகதை, உரைநடை, நாடகம் உள்ளிட்ட புத்திலக்கியங்கள், ஊடகங்கள் ஆகிய ஆய்வுக்களங்களை அடியொற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கருத்தரங்கப் பொருண்மையை அடியொற்றியே கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

## ஆய்வுக்கட்டுரை வழங்கும் முறை

'இந்திய விடுதலைப்போரில் தமிழகம்' என்னும் மாணவர் கருத்தரங்கில் பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளின் தமிழ்த்துறையில் பயிலும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள், ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்கள், முதுகலை மாணவர்கள் மட்டுமே கட்டுரையை அளிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர். கட்டுரைகள் A4 தாளில் பத்துப் பக்க அளவில் பாமினி (Bamini Font) அல்லது யுனிகோடு (Unicode) எழுத்துருவில் (Font Size 12 : Line Space 1.5) கணினித் தட்டச்சு செய்து sjctamilstudentsseminar@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டுரைகள் மின்னஞ்சலில் அனுப்பியதைக் கட்டுரையாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு கட்டுரையும் ஆய்வுச்சுருக்கம், கலைச்சொற்கள், முன்னுரை ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப் பெறுதல் வேண்டும். கட்டுரையின் இறுதியில் சான்றெண் விளக்கம், துணை நூற்பட்டியல் ஆகியவையும் இடம்பெறல் வேண்டும்.

கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுக் கருத்தரங்கின் போது வெளியிடப்படும் ஆய்வுக்கோவையிலும், வளன்ஆயம் என்னும் மின்னிதழிலும் இடம்பெறும். சிறப்பான கட்டுரைகளுக்குப் பரிசும் வழங்கப்படும்.

பதிவுக்கட்டணம் : இல்லை

**ஆய்வுக்கட்டுரைகள் வந்து சேரவேண்டிய இறுதிநாள்: 10-04-2022**

## மாணவர் கருத்தரங்கம்
## இந்திய விடுதலைப்போரில் தமிழகம்
## 20, ஏப்ரல் 2022
## பதிவுப்படிவம்

பெயர் : ....................................................................

கல்வித்தகுதி : ..............................................................

கற்கும் வகுப்பு: ............................................................

பயிலும் நிறுவன முகவரி :.................................................

....................................................................

....................................................................

....................................................................

தொடர்பு முகவரி : ..........................................................

....................................................................

....................................................................

....................................................................

அலைபேசி எண் & புலனம் : ..............................................

மின்னஞ்சல் முகவரி : ......................................................

கட்டுரைத் தலைப்பு : .......................................................

....................................................................

....................................................................

இடம் :

நாள் : கையொப்பம்

(இப்படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்)